# பங்குத் தந்தையிடமிருந்து



இறை இயேசுவில் நம்பிக்கை கொண்ட எனதருமை இறை சமூகமே!

நம்பிக்கைச்சுடர் என்னும் மாதாந்திர செய்திமடல் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருத்தூதர் புனித யூதா ததேயுவின் பாதுகாவலில் பரிந்துரையில் நம்பிக்கை வைத்து நமது இறைசமூகம் நாளும் வளர்ந்து கொண்டே இருப்பதை நினைத்து, நினைத்து, எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

நம்முடைய கூட்டுச் செபம், கூட்டு உழைப்பு, ஒத்துழைப்பு, நல்லெண்ணங்கள், ஆலோசனைகள், யோசனைகள், எல்லாம் நம்மையும் நமது பங்கையும் முன்னேற செய்து இருக்கிறது என்றால், அது உண்மையிலும் உண்மை.

"நம்பினால் கடவுளின் மகிமையை காண்பாய்" என்ற இறைவார்த்தைக்கேற்ப நம்முடைய செபத்தின் கனியாக அகில உலக திரு அவை சிறப்பிக்கும் இறை இரக்கச் சிறப்பு யூபிலி ஆண்டில் நமது பங்கை இறை இரக்க திருயாத்திரைத்தலமாக தேர்ந்தெடுத்து, அறிவிப்பு செய்து, தொடர்ந்து நம்மீது அக்கறையும், அன்பையும், ஆசீரையும் நல்கிவரும் நமது ஆயர் பெருந்தகை மேதகு டாக்டர். A. நீதிநாதன் அவர்களுக்கு இறைசமூகமாய் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றோம்.

இறை இரக்க ஆண்டில் உடல் சார்ந்த, ஆன்மா சார்ந்த இரக்கச் செயல்களில் (நம்மை) நமது ஆன்மீகத்தை வளர்த்துக் கொண்டோம். நற்செயல்கள் செய்தோம், இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்தோம். குறிப்பாக வெள்ள நிவாரண பணிகளில் மனமுவந்து ஆர்வமுடன் பங்கேற்றோம். பரிபூரணபலன் பெறும் அருளிரக்கக் கொண்டாட்டங்கள், 9 ஒப்புரவு வாரங்கள் மற்றும் 7 மணி நேர தொடர் செபமாலை, 21 நாள் 21 மணிநேர திருவிழா தியான தயாரிப்பு ஆராதனை, சிறைச்சாலை சந்திப்பு என பலப்பல இரக்கச் செயல்பாடுகள் செய்தோம்; தொடர்ந்து செய்வோம்.

மிகச் சிறப்பாக இறையிரக்க சிறப்பு யூபிலி ஆண்டில் நமது திருயாத்திரைத்தலத்தின் 39ஆம் ஆண்டு திருவிழாவை அக்டோபர் 22 முதல் அக்டோபர் 30 ஆம் தேதிவரை அர்த்தமுள்ளவிதத்தில் கொண்டாடினோம். உங்களின் மேலான செப உதவிக்கும், தாராளமான நன்கொடைகள் தந்தமைக்காக, என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

இம்மாதம் மரித்த விசுவாசிகளைக் குறிப்பாக நம் பங்கிற்காக உழைத்த, நம் நெஞ்சில் நிறைந்தவர்களை நினைவு கூர்ந்து செபிப்போம்.

இறை இரக்க சிறப்பு யூபிலி ஆண்டு டிசம்பர் 8 ஆம் நாள் 2015ல் தொடங்கியது. வரும் நவம்பர் 20, 2016 அன்று நிறைவடைகின்றது. நமது பங்கில் நவம்பர் 17ம் நாள் வியாழன் அன்று நிறைவு செய்கின்றோம். இரக்கத்தின் ஆண்டு நிறைவடையலாம், ஆனால் ஆண்டவரின் இரக்கம் தீர்ந்துபோகவில்லை. (புலம்பல். 3:22) என்ற நமது நம்பிக்கையின் பயணம் தொடரட்டும்................

காலம் கனியும்...................... நம்பிக்கையின் சுடர் ஒளிரும்!

**அருட்தந்தை. மைக்கேல் சுரேஷ்**
பங்குத் தந்தை



# நினைவில் வாழ்வோர்க்கு நித்தமும் செபம்

இறந்தவர்கள் அனைவரையும் நவம்பர் 2ல் நாம் நினைக்கிறோம். நம் அன்னையாகிய திருச்சபை, மோட்சத்திலிருக்கும் தன் மக்களை நினைத்தபின் வேதனைப்படும் தன் மக்களையும் நினைக்கின்றது. அவர்களுக்காகவும் பரிந்து பேசுகிறது. அவர்களுக்கு தன்னாலான உதவி செய்ய முயற்சிக்கிறது. மோட்சத்தில் வாழும் தன் மக்களுடன் அவர்களையும் சீக்கிரம் ஒன்றிக்கும்படி மன்றாடுகிறது.

இன்று ஒவ்வொரு குருவும் மூன்று திருப்பலி ஒப்புக்கொடுக்கிறார். இந்த சலுகை 10.8.1915 லிருந்து அளிக்கப்பட்டிருக்கிறது. முதல் திருப்பலி உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் அனைவருக்காகவும் ஒப்புக் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது திருப்பலியை பாப்பானவரது கருத்துக்களுக்காக ஒப்புக் கொடுக்க வேண்டும். மூன்றாவது திருப்பலியை குரு தமக்குப் பிரியமான கருத்துக்களுக்காக ஒப்புக் கொடுக்கலாம்.

செபம், தவம், தர்மம் இம்மூன்று வழிகளால் உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமங்களுக்கு உதவி செய்கிறோம். திருப்பலி, செபமாலை, சிலுவைப்பாதை, இரக்கமுள்ள இயேசுவே - இறந்தவர்களுக்கு இளைப்பாற்றி கொடுத்தருளும். இது போன்ற செபங்களால் நாம் அவர்களது வேதனைகளை தணிக்கலாம். உணவு, உடை, உறக்கம், உரையாடல் போன்ற ஒறுத்தல்களை செய்து அவர்களுக்கு உதவி அளிக்கலாம். நாம் செய்யும் தர்மத்தை அவர்களின் வேதனையைத் தணிப்பதற்காக ஒப்புக் கொடுக்கலாம்.

இயேசுவை நேசிக்கிறவன் உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமங்களுக்கு ஏராளமாக உதவி செய்வான். ஏனெனில் அவர்கள் இயேசுவின் சகோதரர்கள்; சிறையிலிருக்கும் சகோதரர்கள்; மோட்ச மகிமை என்னும் ஆடையின்றித் தவிக்கும் சகோதரர்கள். அவர்களுக்கு உதவி செய்யும் பொழுது நாம் இயேசுவுக்கு உதவி செய்கின்றோம்.

பிறர் மீது கடுகளவு அன்பு உன்னிடம் இருக்குமானால் உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமங்களுக்கு நீ உதவி செய்வாய். நீ உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருக்கும் போது பிறர் உனக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்புவாய். அப்படியானால் இப்பொழுது அவர்களுக்கு உதவி செய். எந்த அளவையில் நீ அளப்பாயோ அதே அளவையில் உனக்கு அளக்கப்படும்.

இந்த உலகில் ஒருவருக்கு உதவி செய்கிறோம். அவருக்கு நமது உதவி இன்னும் தேவைப்படுகிறது. அவர் நம்மிடம் இன்னும் உதவி கேட்டு வருகிறார். உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமங்களுக்கு உதவி செய்து அவர்களை

மோட்சத்துக்கு அனுப்புகிறோம். இனி அவர்களுக்கு எவ்வித தேவையும் கிடையாது. அவர்கள் கடவுளை வாழ்த்துவார்கள். தம் உபகாரிகளுக்காக செபித்துக் கொண்டிருப்பார்கள். நன்றி மறப்பது மோட்சத்தில் கிடையாது.

**சிந்தனை:**

எந்த அளவையில் நாம் அளப்போமோ அதே அளவையில் நமக்கு அளக்கப்படும். உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமங்களுக்கு உதவி செய்வோமானால் நாம் இறந்த பிறகு நமக்கு உதவி செய்வார்கள்.

**செபம்:**

இரக்கம் உள்ள இயேசுவே,
இறந்தவர்களுக்கு இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

**அறிவுக்கு:**

செங்கல்பட்டு மறைமாவட்டத்தில் மொத்தம் பங்குகள் -103

**உடலுக்கு:**

மாலை வேளையில் கை கால்களில் தேங்காய் எண்ணெய் தேய்த்து கொண்டால் டெங்கு கொசுக்கள் கடிக்காது.

**ஆன்மாவுக்கு:**

உம்மால் படைக்கப்பட்ட என் ஆன்மா உம்மை வந்து அடைந்தால் ஒழிய, நிம்மதி அடையாது.

- **புனித அகுஸ்தினார்**

## சாட்சி



அன்சல் ஜான்

அன்சல் ஜான் என்னும் நான் காரைக்குடியில் இருந்து சைனா சென்று மருத்துவப் படிப்பு படித்து வருகின்றேன். கடந்த 2014ஆம் ஆண்டு எனக்கு தொண்டையில் புற்று நோய் (3ஆம் நிலை) பாதிக்கப்பட்டு படிப்பை பாதியில் விட்டு விட்டு மருத்துவ சிகிச்சையை, அடையார் கேன்சர் இன்ஸ்டியூட்டில் தொடர்ந்தேன். நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கையான புனிதர் புனித யூதா ததேயு பரிந்துரையில் என்னுடைய புற்றுநோய் அறுவை சிகிச்சையின்றி கதிரியக்க மருத்துவத்தின் மூலமாகவே 100% குணமாகி, நான் மீண்டும் சைனா சென்று என் மருத்துவப் படிப்பைத் தொடர்கிறேன் என்று, சாட்சி கூறுகிறேன்.

புனித யூதா ததேயுவிற்கு நன்றி.
இயேசுவே ஆண்டவர்! மரியே வாழ்க!

# புனித யூதாததேயு திருயாத்திரைத்தலம்




## புனிதரை போற்றுவோம்

பார் போற்றும் புனிதர்களில் யாம் போற்றும் புனிதர் புனித யூதாததேயு.

மாட்சிமை மிக்க அப்போஸ்தலர் வேத சாட்சியாக மரித்தவர். இறை இயேசுவின் நெருங்கிய உறவினர். துன்புறுவோரின் ஆறுதலுமானவர். பாவிகளுக்காகப் பரிந்துப்பேசுகிறவர்; நம்பிக்கை இழந்தவர்களின் நம்பிக்கை ஆனவர்.( He is known and called as Hope of the Hopeles patron of impossible Cases). வியத்தகு அற்புதங்களை செய்பவர். குறிப்பாக வெளிநாடு வேலை வாய்ப்பு, வெளிநாடு பயணம் செய்பவர்களுக்கு வேண்டும் வரம் தருபவர். வேத கலாபனைகாலத்தில் மக்களுக்காக திருமுகம் எழுதி மறை உண்மையை காத்தவர். எமது ஆலயத்தின் பாதுகாவலர். செங்கை மறைமாவட்டம் தனில் மங்காத புகழோடு விளங்கும் ஆலயங்களில் தனியொரு பெயர் கொண்டு விளங்கும் புனிதர் எமது பாதுகாவலர்.

## அறிவோம் நம் திருயாத்திரைத்தலம்

08.07.1978அன்று சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்தின் அப்போதைய பேராயர் பெருந்தகை. மேதகு. ஆண்டகை அருளப்பா அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றி ஆசியளிக்கப்பட்டு, ஆதம்பாக்கம் பங்கின் அங்கமாக, கிளைப்பங்காக இருந்து வந்தது. சென்னை மயிலை உயர் மறைமாவட்டம் பரந்து விரிந்த நிலையில் அதன் பணிதனை பகிர்ந்திட செப்டம்பர் திங்கள் 2002 ஆம் ஆண்டு செங்கை மறைமாவட்டம் உதயமானது. செங்கை மறைமாவட்டத்தின் ஆயராக மக்கள் ஆயர் மேதகு ஆண்டகை டாக்டர். A. நீதிநாதன் அவர்களை இறைவன் திருநிலைப்படுத்தி இன்று வரை மிகச் சிறப்பாக வழி நடத்தி வருகிறார்கள். செங்கை மறைமாவட்டம் உதயமான பிறகு எமது ஆலயம் ஆலந்தூர் பங்கின் கிளைப்பங்காக விளங்கியது. மக்களின் வேண்டுகோளை ஏற்று 2006 ஆம் ஆண்டு மேதகு ஆண்டகை டாக்டர். A. நீதிநாதன் அவர்களால் தனிப்பங்காக உயர்த்தப்பட்டது. முதல் பங்கு தந்தையாக அருட்பணி G.M.ஜோசப் அடிகளார் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 30.05.2009 முதல் அருட்பணி G.J.டெரிஸ்டீபன் அடிகளார் பங்குத் தந்தையாக பணியாற்றினார். 2013 அக்டோபர் திங்கள் 17ஆம் நாள் ஆலயம் விரிவாக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு ஆண்டகை அவர்களால் அர்ச்சிப்பும் புனித தாமஸ் அக்வினாஸ் திருப்பண்டம் திருப்பலி பீடத்தில் பதிக்கப்பட்டது. 08.06.2014 முதல் அருட்பணி மைக்கேல் சுரேஷ் அடிகளார் பங்குத் தந்தையாக பணியாற்றி வருகிறார்கள். 1978 முதல்



அற்புதங்களையும் அதிசயங்களையும் நிகழ்த்தி வருகின்ற எமது ஆலயம். செங்கை மறைமாவட்ட மேதகு ஆண்டகை டாக்டர். A. நீதிநாதன் அவர்களால் 2016 ஜனவரி திங்கள் 7ஆம் நாள் இறை இரக்க சிறப்பு யூபிலி ஆண்டின் திருயாத்திரைத்தலமாக அறிவிக்கப்பட்டது. தற்போது அதிமிகு மாட்சிமையுடன் அற்புதங்களும் அதிசயங்களும் நடைபெற்று, அனுதினமும் அனேக பக்தர்கள் மனமகிழ்ந்து சாட்சி சொல்லும் அருட்தலமாக, எமது திருயாத்திரைத்தலம் விளங்குகின்றது. 2015 மே திங்கள் 5ம் நாள் எமது பேரருட் தந்தை பாக்யரெஜிஸ் அடிகளாரும், மேதகு ஆண்டகை A. நீதிநாதன் அவர்களும் திருவாய் மலர்ந்து மகிழ்வுடன் அருளியவாறு எமது இறை இரக்கத்தின் திருயாத்திரைத்தலம் திருத்தலம் ஆகிட கருணையும் இரக்கமும் நிறைந்த எமது ஆயர் பெருந்தகையால் ஆசியளிக்கும் இனிய நாளை எதிர் நோக்கி நமது (எங்கள்) வேண்டுதலை இறைவனிடம் அன்றாடம் சமர்ப்பிப்போம்.

## திருப்பலி நேரங்கள்

**ஞாயிறு:** காலை 6.30, 8.30 மணி மாலை 5.00 மணி தமிழில் திருப்பலி
மாலை 6.30 மணி திருப்பலி (ஆங்கிலம்)
(முதல் ஞாயிறு) பகல் 11.30 மணி சிறப்பு நவநாள் திருப்பலி (ஆங்கிலம்) , நற்கருணை ஆசிர்வாதம் - பகல் உணவு

**திங்கள், புதன், வெள்ளி, சனி:**
காலை 6.30 மணி தமிழில் திருப்பலி

**செவ்வாய்:** மாலை 6.30 மணி தமிழில் திருப்பலி

**வியாழன்**: (முதல் வியாழன்) பகல் 11.30 மணிக்கு நவநாள் திருப்பலி, பகல் உணவு,
மாலை 6.30 மணிக்கு சிறப்பு நவநாள் திருப்பலி, தேர்பவனி, நற்கருணைஆசிர்வாதம்
மற்ற வியாழன் பகல் 11.30 மணி திருப்பலி, மாலை 6.30 மணிக்கு நவநாள் திருப்பலி

## மறைக்கல்வி சிட்டுகளுக்கு மட்டும்

1. மத்தேயு நற்செய்தியில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன ?
2. ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரை உள்ள தலைமுறைகள் எத்தனை?
3. இம்மானுவேல் என்பதன் பொருள் என்ன?
4. ஞானிகள் இயேசுவுக்கு காணிக்கையாக அளித்தது என்ன?
5. இயேசு மொத்தம் எத்தனை உவமைகள் கூறியுள்ளார்?
6. பேதுரு என்னும் கிரேக்கச் சொல்லுக்கு பொருள் என்ன?
7. ரபி என்னும் எபிரேய சொல்லுக்கு பொருள் என்ன?
8. புதிய ஏற்பாட்டில் எத்தனை நூல்கள் உள்ளது?
9. மத்தேயு நற்செய்தி எம்மொழியில் எழுதப்பட்டது?
10. பேறு பெற்றோர் எத்தனை வகையுண்டு?

## மறைக்கல்வி மாணவ குழுக்களின் மதிப்பெண் பட்டியல்

| கூடுகள் | புள்ளிகள் |
|---|---|
| எரேமியா | 2000 |
| எசாயா | 1750 |
| எசேக்கியேல் | 1750 |
| தானியேல் | 600 |

# திருமணநாள் நல்வாழ்த்துக்கள்

## Wedding Anniversary

| S.No. | Name | Date of Anniversary |
|---|---|---|
| 1. | Cleetus Terrin & Suganya | 07.11.2013 |
| 2. | Yesuraj & Veronica | 11.11.1985 |
| 3. | Yesuraja & Anitha | 12.11.2010 |
| 4. | Prabhakaran & Venus Florentina | 15.11.2007 |
| 5. | Joseph Thiyagarajan & Jessy | 18.11.1991 |
| 6. | Dharmaraj & Stella Raj | 21.11.1958 |
| 7. | Emmanuel & Thiyagarani | 21.11.1964 |
| 8. | Joseph Roche & Maria Thangam | 22.11.1967 |
| 9. | Thomas Sagaya Emerson & Leena | 28.11.2004 |



# பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்



# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

| S.No. | Name | Date of Birth |
|---|---|---|
| 1. | Infantine Alloma | 1st November |
| 2. | Maria Shobha | ” |
| 3. | Calistus Vimal | ” |
| 4. | Katherin Miranda | ” |
| 5. | M. Boopalan | 2nd November |
| 6. | J.B. Manoharan | 3rd Novemeber |
| 7. | M. Latha | ” |
| 8. | S. Martin | ” |
| 9. | X. Antony Maria Regis | ” |
| 10. | S. Rashika Gracy | ” |
| 11. | Sweatha Ignatius | ” |
| 12. | Mary Carolin Antoniya | 4th November |
| 13. | J. Preethinisha | ” |
| 14. | Pauline Jayanthi | 5th November |
| 15. | E. Libora | ” |
| 16. | Joseph Anand Raj | ” |
| 17. | A. Beltin | ” |
| 18. | P. Shermal | ” |
| 19. | P. Leo Fernando | 6th November |
| 20. | A. Christy | ” |
| 21. | Amala Ceely Victor | ” |
| 22. | B. Xavier | ” |
| 23. | D. Saran Sario | ” |
| 24. | Sarath Baby Mathews | 7th November |
| 25. | Dayana Sumitha | ” |
| 26. | Antony Brightwin | ” |
| 27. | R.Rajesh | ” |
| 28. | Naville Walter Lawrence | 8th November |
| 29. | Gregory Vanheltren | 9th November |
| 30. | T. Liya Veronica | 10th November |
| 31. | A. Caroline Judith | ” |
| 32. | J. Nalini Mary | ” |
| 33. | S. Paulin Carolin | ” |
| 34. | K. Vimala | ” |
| 35. | Ashna Sandoz | 11th November |
| 36. | Benjamin Franklin | ” |
| 37. | Benedict Douglas | 12th November |
| 38. | A. Avinash Raymond Draviyan | ” |
| 39. | Sylvia Suresh | 13th November |
| 40. | J. Anisha | ” |
| 41. | A. Agastine | ” |

| S.No. | Name | Date of Birth |
|---|---|---|
| 42. | A. Benziger | 13th November |
| 43. | Joseph Nicholas Jeyanthi | 14th November |
| 44. | M. Lourdu Jebamalai | ” |
| 45. | S. Pranesh | ” |
| 46. | N. Yesuraj | 15th November |
| 47. | Joel Xavier | ” |
| 48. | Nancy Priyadharshini | ” |
| 49. | C. Jerusha Margarette | ” |
| 50. | John Anton Herman | ” |
| 51. | Geneline Sara | 16th November |
| 52. | M. Margaret | ” |
| 53. | Mangala Maria | ” |
| 54. | X. Jenifer | 17th November |
| 55. | X. Maria Rosaline | ” |
| 56. | Rose Miranda | 18th November |
| 57. | M. Therasammal | ” |
| 58. | Subiksha | ” |
| 59. | Josephin Mary | ” |
| 60. | S.R. Alphonsa | 19th November |
| 61. | G. Gnana Prakasam | ” |
| 62. | A. Marlon | ” |
| 63. | K.O. David | 20th November |
| 64. | Deepti Matilda | ” |
| 65. | Antoniya Thulasi | 21st November |
| 66. | Edward Sunil Joseph | ” |
| 67. | Sophia Thomas | ” |
| 68. | Jude Liyarina | 22nd November |
| 69. | M. Maria Francis Liza | ” |
| 70. | S. I. Anthoni Swami | ” |
| 71. | J.C. Sukumana | 24th November |
| 72. | Victor Thomas | 25th November |
| 73. | K. Mary Chitra | ” |
| 74. | J. K. Tony Alexius | ” |
| 75. | E. Justin | ” |
| 76. | Ludina Peeris | ” |
| 77. | Michael Raj | ” |
| 78. | Theresa Deepa | 26th November |
| 79. | Edward Anil Joseph | ” |
| 80. | J. Charles | 28th November |
| 81. | Nemo Nelson | ” |
| 82 | Anna Xavier | 30th November |
| 83. | Asis Godwin | ” |

# விவிலிய வினா - விடை
# தொடக்கநூல்

1. மனிதனை உருவாக்கி அவன்........................ உயிர் மூச்சை ஊத மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.
2. கடவுள் உருவாக்கிய காட்டு விலங்குகளில் எல்லாம்........................மிகவும் சூழ்ச்சிமிக்கதாய் இருந்தது
3. ........................ சபிக்கப்பட்டவன்: தன் சகோதரருக்கு அவன் அடிமையிலும் அடிமையாக இருப்பான்.
4. மண்ணில் நமக்கு உண்டான கடின வேலையிலும் உழைப்பிலும் நமக்கு ........................ அளிப்பான்.
5. ஆபிரகாம் ........................சென்றடைந்தபொழுது, சாராய் மிகவும் அழகானவராக இருப்பதை ........................ கண்டனர்.
6. உனக்காகக் கோபர் மரத்தால் ஒரு ........................ செய்
7. ஏனெனில் ........................ இழைக்கும் தீமை இன்றும் முழுமையடையவில்லை.
8. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கு பிறந்த ........................ நாளன்று விருத்த சேதனம் செய்தார்.
9. அவர்கள் ........................ சூருக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்து வந்தனர்.
10. காயின் ஆண்டவர் ........................ விட்டு சென்று ஏதேனுக்கு கிழக்கே இருந்த நோது நாட்டில் குடியேறினான்.
11. அவருக்கு ........................ஆண்டின் முதல் மாதத்தின் முதல் நாளில் மண்ணுலகில் இருந்து வெள்ளம் வற்றியது.
12. உம் வழி மரபினர் தம் பகைவர்களின் வாயிலை ........................ கொள்வர்
13. நீ அளித்த ........................ குருதியினின்று விடுதலை பெறுவாய்
14. மம்ரே அருகில் ........................ நிலத்தின் கல்லறையில் ஆபிரகாம் தம் மனைவி சாராவை அடக்கம் செய்தார்
15. எல்லாரும் அவனை எதிர்ப்பார்கள். தன்........................எதிரியாக அவன் வாழ்வான்.
16. ........................ பற்றிய உன் வேண்டுதலை கேட்டேன்.
17. வேண்டாம், ........................ நாங்கள் இரவு தங்குவோம்.
18. என்னை வந்தடைந்த........................அவர்கள் நடந்துக் கொண்டார்களா, இல்லையா?
19. அந்த ........................அவளின் கணவனிடம் அனுப்பிவிடு
20. ........................வாழ்ந்தவற்றில் நாசியால் மூச்சுவிடும் அனைத்தும் செத்துப்போயின.

# இறை இரக்க ஆண்டு சிறப்பு நிகழ்வுகள்:

## இம்மாத நிகழ்வுகள்
## மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்களின் மாதம்

1.11.2016 அனைத்து புனிதர்கள் திருநாள் மாலை 6.30 மணி திருப்பலி

02.11.2016 இறந்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் திருநாள்
காலை 6.00 மணி, 7.30 மணி மற்றும் மாலை 6.30 மணி திருப்பலி
திங்கள் தோறும் மாலை 6.30 மணிக்கு மரித்த விசுவாசிகளுக்காக சிறப்பு திருப்பலி (நவம்பர் மாதம் மட்டும்)

03.11.206 இறை இரக்க நம்பிக்கை வியாழன் கொண்டாட்டம்
(முதல் வியாழன்) பகல் 11.30 மணிக்கு நவநாள் திருப்பலி, குணமளிக்கும் நற்கருணை வழிபாடு, பகல் உணவு
மாலை 6.30 மணிக்கு நவநாள் திருப்பலி, தேர்பவனி, நற்கருணை ஆசீர்வாதம்

தலைமை: பேரருட்தந்தை அருட்பணி. M. அருள்ராஜ் முதன்மை குரு -சென்னை மயிலை உயர் மறைமாவட்டம்

9.11.2016 இலாத்தின் பேராலய நேர்ந்தளிப்பு காலை 6.30 மணி திருப்பலி

10.11.2016 இறை இரக்கத்தின் கொண்டாட்டம்
தலைமை: அருட்பணி அம்புரோஸ் அடிகளார்
(இறை இரக்கத்தின் தூதுவர்)

13.11.2016 (1) மறை பரப்பு ஞாயிறு
சிறப்பிப்போர்: இயேசுவே நம்பிக்கை ஜெபக்குழு
தலைமை: அருட்பணி. மைக்கேல் சுரேஷ்,
பங்குத்தந்தை, வாணுவம்பேட்டை

(2) இளைஞர் இயக்கத்தின் 3வது கருத்தரங்கு.
தலைமை: அருட்பணி . லாரன்ஸ் அடிகளார்

17.11.2016 இறை இரக்கத்தின் ஆண்டின் நிறைவு கொண்டாட்டம்

20.11.2016 கிறிஸ்து அரசர் பெருவிழா
தலைமை. அருட்பணி அருள்ராஜ் அடிகளார்
(இறைஇரக்கத்தின் தூதுவர்)

22.11.2016 புனித சிசிலியா திருவிழா (பாடகர்களின் பாதுகாவலர்) மாலை 6.30 மணி திருப்பலி

27.11.2016 திருவருகை காலத்தின் முதல் ஞாயிறு

30.11.2016 திருத்தூதர் அந்திரேயா திருவிழா காலை 6.30 மணி திருப்பலி